F/C



## நகர் ஊரமைப்புத் துறை

## மாவட்ட நகர் ஊரமைப்பு இணை இயக்குநர், கோயம்புத்தூர் மாவட்டம் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : திரு இரா.வாழவந்தான், பி.இ.,

ந.க.எண் . 1620/2020 கோ.மா

நாள் : 08 .09.2020

பொருள் : மலையிடப்பகுதி - குடியிருப்புக் கட்டிடம் - மாவட்ட நகர் ஊரமைப்புத் துறை – கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையம் வட்டம் - சிக்கதாசம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் - புல எண்: 522/1 -ல் 0.93.00 ஹெக்டேர் - மனையிடத்திற்கு மனையிட ஒப்புதல் அம்மனையில் அமையும் 6 பிளாக்குகளில் தரை + 3தளங்கள் கொண்ட 352 குடியிருப்புகள் அடங்கிய உத்தேச தொகுப்பு குடியிருப்புக் கட்டிட வரைபடங்களுக்கு தொழில் நுட்ப முன் இசைவு வழங்குதல் - குறித்து.

பார்வை :

1. மனுதாரர் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம், கோயம்புத்தூர் கடிதம் ந.க.எண்.1868/AE(P)/2018 நாள்.13.03.2020
2. இணையதள விண்ணப்பம் எண்.202000602030584 நாள்.27.01.2020
3. மாவட்ட ஆட்சித் தலைவர், கோயம்புத்தூர் அவர்கள் செயல்முறைகள் ந.க.எண்.17574/2017/ஆ3 நாள். 27.02.2020
4. தலைவர் , சிக்கதாசம்பாளையம் ஊராட்சி ,தீர்மானம் எண்.415 , 421/2020. நாள்.19.06.2020
5. தடையின்மை சான்று வட்டாட்சியர், மேட்டுப்பாளையம் வட்டம், கோயம்புத்தூர், அவர்கள் கடிதம் ந.க.எண். 930/2020/A3 நாள். 13.03.2020.
6. Assistant Director(i/c)/Joint Director, Department of Geoloy and Mining , Coimbatore letter K.Dis No.104/Mines/2020 Dated 01.06.2020.
7. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர், சென்னை அவர்களின் கடித எண்: K.Dis.No.TS4/9874/2020, நாள்:07.08.2020.
8. செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்: இ/1320/2020 நாள்:06.06.2020.
9. மாவட்ட அலுவலர், தீயணைப்பு-மீட்பு பணித்துறை (மு.கூ.பொ). கோயம்புத்தூர், அவர்கள் மூ.மு. எண்.3791/D1/2020 நாள்.11.06.2020.
10. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண். 4367/2019 பிஏ1, நாள். 06.11.2019.
11. அரசாணை எண்.79.வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை ந.வ.4(3). நாள்.04.05.2017
12. அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.04.02.2019 தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019.
13. இவ்வலுவலக கேட்பு கடிதம் நாள்.26.08.2020
14. மனுதாரர் கடிதம் நாள்.07.09.2020

*******

உத்தரவு

கோயம்புத்தூர் மாவட்டம் - மேட்டுப்பாளையம் வட்டம் - சிக்கதாசம்பாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் - புல எண்: 522/1 -ல் 0.93.00 ஹெக்டேர் - மனையிடத்திற்கு "ABCD" என எல்லையிட்டு மனையிட ஒப்புதல் எண். ம.வ/கோமா.எண்.65/2020 என எண்ணிடப்பட்டும், அம்மனையில் அமையும் 6 பிளாக்குகளில் தரைத்தளம் + 3 தளங்கள் கொண்ட 352 குடியிருப்புகள் அடங்கிய உத்தேச தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடங்களுக்கு க.வ/ கோமா.எண். 23 அ,ஆ,இ/2020 என எண்ணிடப்பட்டும், கீழ்க்கண்ட பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப முன்இசைவு வழங்கப்படுகிறது.

உத்தேச விபரம்

மனையின் பரப்பு : 9300.00 ச.மீ

| பிளாக் A | | பிளாக் B,C,D,E,F | |
|---|---|---|---|
| தரைத்தளம் | : 289.08 ச.மீ | தரைத்தளம் | : 581.10 ச.மீ |
| முதல் தளம் | : 289.08 ச.மீ | முதல் தளம் | : 581.10 ச.மீ |
| 2-ம் தளம் | : 289.08 ச.மீ | 2-ம் தளம் | : 581.10 ச.மீ |
| 3-ம் தளம் | : 289.08 ச.மீ | 3-ம் தளம் | : 581.10 ச.மீ |
| மொத்தம் | : 1156.32ச.மீx 1=1156.32 ச.மீ | மொத்தம் | : 2324.40ச.மீx 5=11622.00 ச.மீ |

| | |
|---|---|
| மொத்த கட்டிடப்பரப்பு | : 12,788.32 ச.மீ |
| FSI | : 1.37 |
| PC | : 34.35% |
| இருசக்கர வாகன நிறுத்துமிடம் | : 352 Nos |
| முன்பக்கத் திறவிடம் | : குறைந்தபட்சம் 13.90 மீ |
| பின்பக்கத் திறவிடம் | : குறைந்தபட்சம் 2.52 மீ |
| பக்கத் திறவிடங்கள் | : குறைந்தபட்சம் 2.84 ச.மீ (பக்கம்-1) |
| | : குறைந்தபட்சம் 8.82 ச.மீ (பக்கம்-2) |
| பொது உபயோகம் - 1 | : 257.33 ச.மீ |
| பொது உபயோகம் - 2 | : 361.41 ச.மீ |
| பொது உபயோகம் - 3 | : 344.70 ச.மீ |
| பூங்கா | : 1005.40 ச.மீ |

## நிபந்தனைகள்

1) உத்தேச தொகுப்பு குடியிருப்புக் கட்டிடம் அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.I) துறை நாள். 04.02.2019 கீழ் வெளியிடப்பட்ட Tamil Nadu Combined Development and Building Rules 2019 விதிகளுக்கு உட்பட்டு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

2) ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக. கட்டிடத்தில் எந்தவித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் செய்வதாக இருந்தால் இத்துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.

3) வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படல் வேண்டும்.

4) வரைபடத்தில் காட்டியுள்ளவாறு மழை நீர் சேகரிப்பு கட்டமைப்பு அமைக்கப்படல் வேண்டும்.

5) உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

6) விண்ணப்பதாரர் / அபிவிருத்தியாளர் மற்றும் கட்டிட வடிவமைப்பாளர் / கட்டிட உரிமம் பெற்ற அளவர் மற்றும் கட்டுமானப் பொறியாளர் ஆகியோர் கட்டுமானப் பணியின் போது ஒருங்கிணைந்து செயலாற்றி கட்டிடத்தின் உறுதித் தன்மை, கட்டுமானத் தரம் ஆகியவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7) கட்டிடம் கட்டப்படும் போது அரசு அங்கீகாரம் பெற்ற மின் ஒப்பந்ததாரர் மூலம் ஒயரிங் செய்யப்பட வேண்டும்.

8) பார்வை 12-ல் கண்ட அரசாணையின்படி உத்தேச கட்டிட ஒப்புதல் விவரங்கள், அமைவிட விவரங்கள், உரிமையாளர், உள்ளாட்சி. பொறியாளர்கள் விவரங்கள் அடங்கிய 60cm x 120cm அளவு கொண்ட தகவல்பலகை கட்டுமானம் நடைபெறும் இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

9) உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.

10) உத்தேச கட்டிடத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும். மேலும் மொத்த டெரஸ் தளப்பரப்பில் 1/3 பரப்பிற்கு Solar photo voltaic panel உத்தேசிக்கப்படல் வேண்டும்.

11) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவை இல்லை என அறியப்பட்டால் எவ்வித முன்னறிவிப்புமின்றி இத்துறையால் அனுமதி ரத்து செய்யப்படும்.

12) அரசாணையின் படி.341,ந.நி. மற்றும் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ந.நி.-1) நாள்.03.11.2004 செப்டிக் டேங்கில் " U Trap " அமைத்தல் வேண்டும்.

13) சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின் படி உத்தேச கட்டிடத்திற்கு FLYASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும

<u>சிறப்பு நிபந்தனை :</u>

1. அரசாணை எண். 18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.I) துறை நாள் 04.02.2019 கீழ் வெளியிடப்பட்ட மனை கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள வரிசை எண் 1 முதல் 5 வரையிலான 1005.412 ச.மீ பரப்புள்ள (OSR) பொது உபயோக ஒதுக்கீடு திறவிடத்தினை TNCDBR 2019 Rule No:41, Explanation (i) -ன்படி The Space may be maintained by the Owner concerned subject to the supervision and monitoring of the concern local body

2. "நகர் ஊரமைப்புத் துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில் நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானப்பத்திரம் பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன்மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது.

சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாரருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல."

3. பார்வை 3-ல் கண்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் செயல்முறைகள் மற்றும் பார்வை 4-ல் கண்ட தலைவர் , சிக்கதாசம்பாளையம் ஊராட்சி அவர்களின் தீர்மாணம் ஆகியவற்றின்படி மனையிடம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் நடவடிக்கையில் உள்ளதால், நில உரிமை மாற்றம் பெற்ற பின்னர் மனைவரைபடத்தில் அமையும் OSR (பொது ஒதுக்கீடு–பூங்கா) உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யப்படல் வேண்டும்.

மனை மற்றும் வரைபட ஒப்புதலுக்கான நன்னிலை வரி கட்டணம் மனுதாரரால் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரரிடமிருந்து பார்வை 11–ல் கண்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ள விதி எண் 3-ன் படி கூராய்வு கட்டணமாக ரூ.1000/-ஐயும், விதி எண் 9-ன் படி இடத்தின் சந்தை மதிப்பில் 3% தொகையை நிலப்பயன்மாற்ற கட்டணமாகவும் கீழ்கண்ட கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்ட பின்னர் உள்ளாட்சியால் உரிமம் வழங்கப்பட வேண்டும்.

**<u>கணக்குத் தலைப்பு</u>**

0217 Urban Development
60 Other Urban Development schemes
800 Other Receipts.
AS Receipts under Land use conversion charges -27
Non Taxation Fees -09 Collections
(DPC: 0217-60-800-AS-2790)

உள்ளாட்சியால் மேற்படி கட்டுமானத்திற்கு உரிமம் வழங்கிய பின்னர், அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. வரைபடங்கள் பெற்றுக்கொண்டமைக்கு ஒப்புகைசான்று அளிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(ஒப்பம்)
இணை இயக்குநர்,
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
கோயம்புத்தூர் மாவட்டம்

**<u>இணைப்பு</u>**

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள் - இரு தொகுப்புகள் ( 2 * 3)
(மனை ஒப்புதல் எண்.ம.வ./கோமா எண். 65/2020 மற்றும்
தொகுப்பு குடியிருப்பு கட்டிட வரைபடங்கள்
க.வ/கோ.மா. எண். 23 அ,ஆ,இ /2020 )

| பெறுநர் : | நகல் : (பத்தி 1 மட்டும்) |
|---|---|
| தலைவர்,<br>சிக்கதாசம்பாளையம் ஊராட்சி,<br>மேட்டுப்பாளையம் ஊராட்சி ஒன்றியம்,<br>மேட்டுப்பாளையம் வட்டம்,<br>கோயம்புத்தூர் மாவட்டம். | நிர்வாகப் பொறியாளர்,<br>தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்,<br>கோயம்புத்தூர் கோட்டம்,<br>397A, வடக்கு ஹவுசிங் யூனிட்,<br>செல்வபுரம்,<br>கோயம்புத்தூர் -641 026<br>ph.9842261970<br>email.eecbetnscb@yahoo.co.in |

TRUE COPY

17/9/20

EXECUTIVE ENGINEER
T.N.S.C.B. CBE DN

சிக்கதாசம்பாளையம் கிராமம் ஊராட்சி (முதல் நிலை)......தலைவர்......அவர்களின்

## நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி T. விமலா

ஊராட்சிகள் சட்டம் 1994 & பஞ்சாயத்து கட்டிட விதிகள் 1997ன படி அரசாணை எண்.255 / 18.8.1997 பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமம்.

கட்டிட உரிமம் எண்......30/2020-21...... நாள்......15-10-2020......

பொருள்: கட்டிட உரிமம் சிக்கதாசம்பாளையம் கிராமம் ஊராட்சி (முதல் நிலை) க.ச.எண்......522/1......ல்......அறிவொளி நகர்...... ஊரில் பகுதியில் இடத்தில் புதிய சேர்த்து / ~~திருத்தி அமைத்து~~ ~~ஓட்டு கட்டிடம்~~ / ~~ACC கட்டிடம்~~ / RCC கட்டிடம் / RCC மாடி வீடு கட்டிடம்/ ~~தொழிற்சாலைக் கட்டிடம்~~/~~வணிகக் கட்டிடம்~~ கட்டுதல். அனுமதி வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை : 1) திரு. ~~திருமதி~~ ......அவர்கள்......10-9-2020......ம் தேதியிட்ட விண்ணப்பம்

2) இவ்வூராட்சி மன்ற தீர்மான எண் ...... நாள்......

AE(P) 16/10

உத்திரவு :

சிக்கதாசம்பாளையம் கிராம ஊராட்சி (முதல் நிலை) பகுதியில்...... எண்......க.ச.எண்......522/1...... பகுதியில்......அறிவொளி நகர்......இடத்தில் குடியிருப்பு / ~~தொழிற்சாலை/வணிகம் சார்ந்த~~ கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி வேண்டி ~~ஓட்டுவீடு~~ / ~~ACC வீடு~~ / RCC கட்டிடம் / RCC மாடி வீடு கட்டிடம் / ~~தொழிற்சாலைக் கட்டிடம்~~ / ~~வணிகக் கட்டிடம்~~ /திரு. ~~திருமதி~~ ...... அவர்கள் சமர்ப்பித்துள்ள கட்டிட வரைபடங்கள் அங்கீகாரம் செய்யப்பட்ட கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு இவ்வுத்திரவு தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் புதியதாக / சேர்த்து / திருத்தியமைத்து கட்டிடம் கட்டிக் கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

அனுமதி காலம்......15-10-20......தேதி முதல்......14-10-21......தேதி வரை மட்டும்

நிபந்தனைகள் :

1. கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட தேதியை கட்டிட வேலை முடிந்த பதினைந்து தினங்களுக்குள் இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

2. மேலும் ஊராட்சி மன்றத்தால் இனிவரும் காலங்களில் அவ்வப்போது தெரிவிக்கப்படும் அறிவுரைகள் உரிமையாளர்/ உரிமையாளர்கள்/மனுதாரர்/மனுதாரர்கள் விதிமுறைகளுக்குட்பட்டு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

3. மனுதாரர்/மனுதாரர்கள் ஊராட்சிமன்ற தலைவரிடமிருந்து கட்டிடவரை படத்திற்கு அங்கீகாரம் பெற்றவுடன் கட்டிட வரைபட ஒப்புதல் பெற்ற இடத்தில் அறிவிப்பு பலகை மூலம் மனைப்பிரிவு அங்கீகரித்த மன்ற தீர்மான எண்ணும் - நாளும் / மன்றத்திற்கும் - மனுதாரருக்கும் ஒப்பந்தமான நாளும் - எண்ணும் தெளிவாக குறிப்பிட்டு கண்டிப்பாக அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.

Scanned with CamScanner

4. இம்மனுதாரராகிய தங்களுக்குச் சொந்தமான பத்திரத்தில் / பட்டாவில் குறிப்பிட்டுள்ள இடங்களில் நிலத்தில் மட்டுமே கண்டிப்பாக கட்டப்பட வேண்டும். அதற்கு மட்டும் இந்த வரைபட அங்கீகாரம் செல்லத்தக்கது ஆகும். அவ்வாறு தங்களுக்குச் சொந்தமான பத்திரத்தில் பட்டாவில் குறிப்பிட்டுள்ள இடத்தை விட்டு வேறு எந்த இடத்தில் கட்டிடம் கட்டினாலும் அது சட்டப்படி தவறானது ஆகும். அதற்கு இவ்வரைபட அங்கீகாரம் செல்லத் தக்கது அல்ல. அதனால் ஏற்படும் அனைத்து பின் நடவடிக்கைகளுக்கும் இவ்வூராட்சி பொறுப்பல்ல தாங்களே முழு பொறுப்பு.

5. சர்கார் நிலத்திலும். பொது சாலைகளிலும். அரசுக்கு சொந்தமான புறம்போக்கு. ஊராட்சிக்கு சொந்தமான இடங்களிலும் நெடுஞ்சாலைக்குட்பட்ட இடங்களிலும் மற்றும் அரசுக்கு சொந்தமான எந்த ஒரு இடங்களிலும் ஆக்கிரமிப்புகள் ஏதும் செய்யக்கூடாது. அவ்வாறு ஆக்கிரமிப்புகள் ஏதேனும் செய்து கட்டிடம் கட்டினால் இந்த வரைபட அங்கீகாரம் செல்லத்தக்கது அல்ல. அதனால் ஏற்படும் அனைத்து பின்நடவடிக்கைகளுக்கும் பின்விளைவுகளுக்கும் இவ்வூராட்சி எந்த விதத்திலும் பொறுப்பாகாது அதற்கு தாங்களே முழு பொறுப்பாகும்.

6. தெருவை அனுசரித்து போட்டிருக்கும் 4 அடி காலி இடத்தில் படிகள் தவிர வேறு எந்தவிதமான கட்டிடமும் கட்டக்கூடாது.

7. இந்த உரிமத்தில் கண்ட கால அளவிற்குப் பிறகு மனு செய்து உரிமம் பெறாமல் கட்டிட வேலை செய்யக்கூடாது.

8. அனுமதிக்கப்பட்ட கால அளவிற்குள் கட்டி முடிக்கப்படாத கட்டிடங்களுக்கான உரிமம் புதுபித்துக்கொள்ள உரிய கட்டணம் செலுத்தி 15 நாட்களுக்குள் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டும்.

9. மாறுதல் செய்ய வேண்டுமானால் மீண்டும் வரைபடங்கள் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற்று கட்டிட வேலை செய்ய வேண்டும்.

10. விண்ணப்பதாரர் உரிமத்தையும் வரைபடத்தையும் கட்டிடம் கட்டும் இடத்தில் வைத்திருக்க வேண்டும். ஊராட்சி அலுவலக அங்கீகாரம் பெற்ற அதிகாரிகள் வந்து கேட்கும் போது காண்பிக்க வேண்டும்.

11. உரிமக்கட்டுப்பாட்டிற்கு. உரிமம் பெற்ற வரைபடத்திற்கும் மாறாக செய்தாலும் ஊராட்சி சட்ட திட்டங்களுக்கோ அல்லது வேறெந்த சட்ட திட்டங்களுக்கோ மாறாக உரிமம் பெற்று இருந்தாலும் உண்மைகளை மறைத்து தவறான வழியில் உரிமம் பெற்றிருந்தாலும் இந்த உரிமம் தள்ளுபடி செய்யப்படும்.

12. கொடுக்கப்பட்ட தகவல்கள் மற்றும் ஆவணங்கள் தவறானதாக இருந்தாலோ பொது இடத்தில் ஆக்கிரமிப்பு இருந்தாலோ இவ்வனுமதி செல்லத்தக்கதல்ல. அவ்வாறு இருப்பின் உரிமம் உடனடியாக எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.

13. கட்டிடம்....14-10-21..............தேதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் இல்லாவிட்டால் 30 நாட்களுக்கு முன்னதாக மனு கொடுத்து அனுமதிக் கட்டணம் செலுத்தி அனுமதி பெற்ற பின் மேற்கொண்டு கட்டிட வேலை செய்ய வேண்டும்.

14. சமையலறையில் புகை போக்கி அமைக்கவேண்டும். கதவு ஜன்னல்கள் முறையே 6'x3', 4'x3' அளவுக்கு குறையக் கூடாது.

15. முறையான வடிக்கால் வசதி அமைக்க வேண்டும்.

16. சிக்கதாசம்பாளையம் கிராம பஞ்சாயத்துக்குட்பட்ட நிலத்தில் அல்லது தெருவில் எந்த விதமான ஆக்கிரமிப்பும் செய்யக்கூடாது. படிகள் முதலியவை மனுதாரரின் சொந்த இடத்திலேயே இருக்க வேண்டும். கதவுகள் வெளிப்பக்கம் திறக்கும் படியாக இருக்கக்கூடாது.

17. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு முன் மண் எடுக்கக்கூடாது.

18. கட்டிட வேலை நடக்கும் இடத்தில் அங்கீகரிக்கப்பட்ட பிளானில் இரு செட் வைக்கப்படுவதுடன், சிக்கதாசம்பாளையம் கிராம பஞ்சாயத்து உத்தியோகஸ்தர்களின் பார்வைக்கு வேண்டும் போது ஆஜர் செய்ய வேண்டும்.

19. கக்கூஸ் சாக்கடை தொட்டி முதலியவை சுகாதார முறைப்படி தளம்போட்டு எப்போதும் சுத்தம் செய்ய ஏதுவாக மார்க்கம் உள்ளதாக இருக்க வேண்டும்.

20 தவறினால் பப்ளிக் கெல்த் 30ன் படி ஆண்டு 26 மற்றும் 28வது செக்சன் படி சர்டிபிகேட் பெறாமல் மேற்படி கட்டிடத்திற்கு குடியேற்றவோ அல்லது குடி வைக்கவோ கூடாது.

21. கட்டிட வேலை தொடங்கும் முன் எலக்ட்ரிக் கனெக்சன்அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டும்

22 வெல் டைப் பிளஸ் அவுட் கக்கூஸ் கட்ட வேண்டும். கக்கூஸ் சுத்தப்படுத்த பிரத்தியோக வாசல் இருக்க வேண்டும். தெரு பக்கம் தள்ளும்படியாக கண்டிப்பாக இருக்கக் கூடாது

Scanned with CamScanner

23.தற்போது உள்ள சட்டதிட்டங்கள் மற்றும் இனிவரும் காலங்களில் மாற்றம்/திருத்தம்/புதிய சட்ட நிர்ணயம் செய்யப்படும் பட்சத்தில் மனுதாரர் உரிமையாளர் உரிமையாளர்கள்/ மனுதாரர்கள்/மனுதாரர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் மீறினால இவ்வுத்திரவு இரத்தாகத்தக்கது.

24.கட்டிடமானது மத்திய/மாநில அரசின் அனைத்து துறையின் விதிமுறைகளுக்கும் அனைத்து துறை கட்டிட விதிகளுக்கும் உட்பட்டு தான் கட்டாயம் கட்ட வேண்டும்.

25.மனையில் கட்டடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொரு கட்டத்திற்கும் உள்ளாட்சியிலிருந்து முறையான அனுமதி பெற்ற பின்னர் கட்டடம் கட்டப்பட வேண்டும். அவ்வாறு கட்டப்படும் கட்டிடத்தில் முறையான மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துவதுடன் தீ விபத்து தடுப்பு சாதனங்கள் அமைப்பதுடன் இயற்கை சீற்றங்களால் பாதிக்கபடாதவாறு முறையான அரசு பதிவு பெற்ற பொறியாளர்களின் ஆலோசனைகள் மற்றும் நேரடி பார்வையில் தான் கட்டாயமாக கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும்.

இந்த உத்திரவு முற்றிலும் தற்காலிகமானது ஆகும். மனுதாரர்/மனுதாரர்கள்/உரிமையாளர்/உரிமையாளர்கள் மேற்குறிப்பிட்ட 1 முதல் 24 வரையிலான அனைத்து நிபந்தனைகளில் எந்தவொரு நிபந்தனையையும் எக்காரணத்தை கொண்டும் கட்டாயம் மீறக்கூடாது. அவ்வாறு மீறும் பட்சத்தில் இவ்வூராட்சி மன்றத்தால் வழங்கப்படுகின்ற இவ்வுத்திரவு இவ்வூராட்சியின் மூலம் தன்னிச்சையாக எந்தநேரமும் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி இரத்து செய்யப்படும்

<u>முக்கிய எச்சரிக்கை :</u>

இந்த அனுமதி/உத்திரவானது மனுதாரர்/மனுதாரர்கள் ஆகிய தாங்கள் அளித்த ஆவணங்களின் அடிப்படையில் தான் வழங்கப்படுகிறது. மேற்படி தாங்கள் ஏதும் தவறான பொய்யான தகவல்கள் ஏதும் கொடுத்து இந்த அனுமதி உத்திரவு பெற்ற பின்னர் வருங்காலங்களில் இவ்வூராட்சிக்கு தெரிய வரும் பட்சத்தில் உடனுக்குடன் எவ்வித முன்னறிவிப்புமின்றி இந்த அனுமதி உத்திரவு இரத்து செய்யப்படுவதுடன் தாங்களின் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் தாங்கள் உள்ளாட்சியிடம் பெற்ற இவ்வனுமதி /உத்திரவு செல்லத்தக்கது அல்ல என்று எச்சரிக்கையுடன் அறிவுறுத்தப்படுகிறது.

T. Vimala

தலைவர்,
சிக்கதாசம்பாளையம் ஊராட்சி

இணைப்பு :

அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்.......3 nos.......எண்ணிக்கை

பெறுபவர் :

திரு.திருமதி.......[illegible].......

க.ச.எண்.......522/1.......

தெரு பெயர்.......[illegible].......

மாவட்டம்.......[illegible].......

TRUE COPY

17/6/...

EXECUTIVE ENGINEER

Scanned with CamScanner

41